செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

[வெள்ளிக்கிழமைதோறும் வெளி வருவது

# இந்துசாதனம்

சைவபரிபாலனசபை வெளியீடு.

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணி மீ 28 உ. அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

பிரதி விலை: சதம் 10.

புத்-அம்] யாழ்ப்பாணம்- கீலக ஞு மாசி மீ உ வெள்ளிக்கிழமை (14-2-1969) [ஆலை-சரு

# 'புள்ளிருக்கு வேளூர்' திருத்தலத்தின் மகாகும்பாபிஷேகம்

## சடாயு, இருக்குவேதம், முருகவேள் மூவராலும் தொழப்பெற்ற புனிதத்தலம்

["இந்துசாதனம்" அபிமான கிருபர்
திரு. மா. பாலசுப்பிரமணியம்அவர்கள் சிதம்பரம், தென்னிந்தியா]

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுரம் ஆதீனத்தின் அருளாட்சியிலுள்ள 27 சிவாலயங்களில் ஒன்றாகவும், முழுமுதற் பரம்பொருளாகிய சிவபெருமான் உயிர்களுக்குள்ள உடல் நோய்களையும் - மன நோய்களையும் பிறவி நோய்களையும் போக்கி, அருள்வழங்குவதற்காகவே பெருங் கருணைகொண்டு, திருக்கயிலாயத்தினின்றும் உமாதேவியார் தைலபாத்திரந்தாங்கி உடன்வர வைத்தீஸ்வரன்கோவிலில (புள்ளிருக்கு வேளூர்) வேப்பமரத்தின் அடியில் எழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டு வருகின்ற ஸ்தலமாகவும், ஜடாயு - ரிக்வேதம்-முருகப்பெருமான் - சூரியன் ஆகியோர் பூஜித்த ஸ்தலமாகவும், அங்காரகனின் க்ஷேத்திரமாகவும், திருநாவுக்கரசரால் "பெரும்பற்றப்புலியூரானைப்பேசாத நாளெல்லாம் பிறவா நாளே" என்றும் "புள்ளிருக்குவேளூரானைப் போற்றாதே ஆற்றநாள் போக்கினேனே" என்றும் தேவாரப்பாடல்மூலம் அறிவுறுத்தப்படுகின்ற ஸ்தலமாகவும், பிரதி மாதம் கார்த்திகை நட்சத்திரந்தோறும் பல ஆயிரக்கணக்கான மக்கள் பக்திப் பரவசத்துடன் வந்து தரிசனம்செய்து வேண்டியவற்றை வேண்டியவாறே பெற்று மகிழ்ச்சியடைந்துகொண்டு வரும் க்ஷேத்திரமாகவும் விளங்கி வருகின்ற "வேளூர்" என்று கூறப்படும் வைத்தீஸ்வரன்கோவில (புள்ளிருக்கு வேளூர்) ஸ்ரீ தையல்நாயகி சமேத ஸ்ரீ வைத்தியநாதர் தேவஸ்தானத்தை தருமை ஆதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞான சம்பந்தபரமாசாரிய சுவாமிகள் 12 லக்ஷம் ரூபாய் செலவில சிறந்த பிரபல சிற்பக்கலைஞர்களை கொண்டு அழகான வகையில் இராஜ கோபுரங்களையும், உள கோபுரங்களையும் மூலவர்களின் விமானங்களையும், சுற்று மண்டபங்களையும் துரிதமாகப் புதுப்பித்துக்கொண்டு வருகின்றார்கள்.

### ஜூலை 2-ஆம் தேதி அன்று மகா கும்பாபிஷேகம்

ஜூலை 2 ஆம தேதி அன்று சுவர்ணபந்தன அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பதற்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைமகா சந்நிதானம் அவர்கள் விரிவான திட்டங்களிட்டு ஏற்பாடுகளை துரிதமாக நடத்திக்கொண்டு வருகின்றார்கள், மக்கள் இதுவரைக் கண்டிராத முறையில் மகா கும்பாபிஷேகம நடைபெறும்.

ஸ்ரீலஸ்ரீ கயிலை மகாசந்நிதானம் ஆவர்கள் அருளாட்சியை ஏற்றுக்கொண்ட பிறகு 27 சிவாலயங்களையும் பெரும் திட்டங்களில ஜீரணோத்தாரணங்களை செய்து மகாகும்பாபிஷேகம செய்துவிட்டார்கள், அம்முறையில் வைத்தீஸ்வரன் கோவில தேவஸ்தானம 1949-ம் ஆண்டில நடத்திவைத்து இப்போது 2 ஆவது சுற்றுக ஜீரணோத்தாரணம நடத்தி வைத்து மகா கும்பாபிஷேகம் நடத்தி வைக்கப்போகின்றார்கள், ஆதீனத்தின 27 சிவாலயங்களையும் ஜீரணோத்தாரணங்கள் செய்து மகா கும்பாபிஷேகங்களை நடத்தி வைத்துள்ள முதலாவது மகா சந்நிதானம ஸ்ரீலஸ்ரீ கயிலை மகாசந்நிதானம அவர்களே ஆவார்கள

27 தேவஸ்தானங்களும இவர்களின் அருளாட்சியில் 27 நட்சத்திரங்களைக் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றன. தரிசனம செய்யவரும பிரமுகர்கள், உயர் பதவியாளர்கள் ஆலயங்களின சிறப்பைப் பார்த்து ஆலயங்களிலுள்ள பார்வையாளர்கள் புத்தகங்களில பெரிதும பாராட்டி எழுதிக்கொண்டே வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

---

சிவமயம்
திருச்சிற்றம்பலம்

ஒளிசேர்ந்த மேனியுடையா
யும்பராளியேன்
றளியராகி யழுதற் றூறு
மடியார்கட்
கெளியானமரர்க் கரியான்
வாழூர் போலும்
வெளிய வுருவத்தானை
வணங்கும் வெண்காடே.
திருச்சிற்றம்பலம்
— திருஞானசம்பந்த சுவாமிகள்.

---

### நாவலர் நல்வாக்கு

திருக்கோயிலினுள்ளே போனவுடன் யாது செய்தல்வேண்டும்?

பலி பீடத்துக்கு இப்பால நமஸ்காரம்பண்ணல்வேண்டும்.

கிழக்கு நோக்கிய சந்நிதானத்திலும், மேற்கு நோக்கிய சந்நிதானத்திலும், எந்தத் திக்கிலே தலைவைத்து நமஸ்காரம் பண்ணல் வேண்டு?

வடக்கே தலைவைத்து நமஸ்காரம் பண்ணல் வேண்டும்.

---

### நாவலர் பெருமான் திருவுருவச் சிலை

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நாவலர் திருவுருவச் சிலை நிறுவுவதுபற்றிய ஆலோசனைக் கூட்டம் ஒன்று நிகழ்ந்தது. வழக்கறிஞர் திரு. வே நாகலிங்கம் அவர்கள் தலைமை வகித்தார். அதிபர் இ. சபாலிங்கம கௌரவ காரியதரிசியாகக் கடமையாற்றினர்.

நாவலர் பெருமானை முதற்கண் சைவநெறிக் காவலராகவும் அடுத்துத் தமிழ்ப் பெருந்தொண்டு செய்தவராகவும் பிரதி லிக்கக்கூடிய வகையில நாவலர் திருவுருவச் சிலை அமைக்கப்பட வேண்டுமென ஏகமனதாகத் தீர்மானித்தனர்.

நாவலர் திருவுருவச் சிலையை நல்லூர் தெற்கு வீதியில சைவ சமய பாடசாலைத்துக்கென நாவலர் பெருமானால் கருமசாதனஞ் செய்யப்பட்ட காணியில நிறுவ வேண்டுமென முடிவாயிற்று

மேற்படி கூட்டம ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபையின ஆலோசனைப்படி கூட்டப்பட்டது. (ந. சி)

---

# வேதாகமத் தோற்றம்

[ அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் ]

(முன்வளர்ச்சி — 5)

#### பதஞ்சலிபத்ததி (வழி)

இப்போது நிகழும் சுவேதவராககற்பத்திற்கு அநேக கற்பங்களுக்கு முன்னுள்ள பத்மகற்பத்திலே இருந்த சிங்கவருமரென்னும் இரணியவருமர் சிதம்பரத்திலே செயற்பாலனவாகிய நித்தியபூசை திருவிழா முதலியன செய்தற் பொருட்டு வேத சிவாகமப்படியே பதஞ்சலி முனிவரைக் கொண்டு ஒரு பத்ததி செய்வித்து அதனை யானைமேலேற்றித் திருக்கோயிலைவலஞ் செய்வித்துக் கனகசபையினுள்ளே பிரவேசித்தாரென்பதாலும் பதஞ்சலி முனிபால் இயற்றப்பட்ட சாத்திரமானது அம்முனிவரது பெயரால் பதஞ்சலிபத்ததி என்று இன்றுமிருத்தல் பிரத்தியக்ஷமென்று சிதம்பரமான்மியமும் கூறுவதாலும் கற்பம் மனுவந்தரம் முதலிய காலப்பிரமாணங்கள் உள்ள பொருளே என்பதும் மிகச் சுருங்கியகால அளவில் அதாவது கி. பி, கி மு என்றுஎங்கள் சமயப் பிரமாணங்களைக் கூறும் தெய்வச் சட்டமாகிய வேதாகமங்களை அளந்துவிடக்கூடாது என்பதும, சிவவாக்காகிய அவைகள் மிகமிகப் பழமையுடையன என்பதும் நிச்சயித்தவாறு காண்க

வேதசிவாகமங்கள் என்னுடைய கட்டளை, எவன் அச் சிவாகமங்களில் விதிக்கப்பட்டவைகளை மீறிநடக்கின்றானோ அவன் எனது ஆஞ்ஞையை மீறியவன். எனக்குத் துரோகி (சிவத்துரோகி) சைவனல்லன் எனது அன்பனுமல்லன், புன்னூறு கற்ப காலம வரையோரமான நரகத்தில் கிடந்து வருந்துவன என்று சிவபெருமான் சுவாயம்புவ ஆகமத்தில திருவாய் மலர்ந்தருளினார்,

வேதாகமங்களை நிந்தித்தவன் நரகத்துன்பத்தை அனுபவித்து, பின் பூமியில் வந்து புலையனாகப் பிறப்பான் வேதாந்த முதலிய சாத்திரங்களைத் தூஷித்தவன் நரகதுன்பசேடத்தின் பொருட்டு பூமியில் வந்து கொலைத் தொழிலைச் செய்யும் வேடனாய்ப் பிறப்பன்.

சிவதருமோத்தரம்
நரகசேடவியல்

வேதநிந்தகனே புன்மைவிடக்
குறும் புலையனாவான்,
வேதநல்லந்த நிந்தகன்வெவ்
வேடனாவான், [என

எனவும், உலகத்திலே அரசனுடைய கட்டளைப்படி அடங்கி நடப்பவர்கள் நன்மதிப்பையும் மேற்பதவிகளையும் அடைந்து இன்பமனுபவிப்பார்கள். அரச கட்டளையை மீறி நடப்பவர்கள் அவமதிப்பையும துன்பத்தையும் அனுபவிப்பர் அதுபோல, தெய்வக கட்டளையாகிய வேத சிவாகமங்களில் விலக்கியவற்றையொழித்தும விதித்தவற்றைச் செய்பவர்கள் இன்பத்தையும் இம்மையில மதிப்பையும் அடைவார்கள், வேதசிவாகம விதிகடந்து நடப்பவாகள் அவமதிப்பையும் துன்பத்தையும் அடைவார்கள வேதசிவாகம மார்க்கத்தை மாற்றியவர்களும் தமது கட்சியை நிலைப்படுத்துவதற்காகவே வேறொரு மார்க்கத்தைக் கற்பித்தவர்களும, வேத சிவாகமங்களுக்கு உயர்வொப்புக்கூறியவர்களும், அவைகள சிவவாக்கல்ல என்று சொல்லி நிந்திப்பவர்களும நரக

(வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

பக்திக்கு அடுத்தது சுத்தம்
சுத்தம் சுகம் தரும்.




மில்க்வைற்சோப்
வாங்கிப் பாவித்து
அதிக இலாபமடையுங்கள்.

## சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

கீலக ௵ மாசி ௴ ௩-௨ வெள்ளிக்கிழமை [1969]

## சிவராத்திரி வழிபாடு

எதிர்வரும் சிவராத்திரி வழிபாட்டைக் குறித்து இக் கட்டுரையை வரைகின்றோம். சிவபெருமானைக் குறித்த அநுட்டிக்கப்படும் விரதங்களுள் இவ்விரதம் தலைசிறந்தது. மாசி மாதத்தின் அபரபக்ஷச் சதுர்த்தசி திதியில்வரும் இவ்விரதத்தை அநுட்டிப்பவர்கள் உபவாசமிருந்து நித்திரையின்றி நான்கு யாமமுஞ் சிவபூசை செய்யக்கடவர். சிவபூசை செய்தற்கருகரல்லாதவர்கள் நித்திரையின்றி ஸ்ரீ பஞ்சாக்ஷர செபமும் புராண சிரவணமும் சிவாலய தரிசனமுஞ் செய்யக்கடவர். உபவாசம் உத்தமம், நீரேனும் பாலேனும் அருந்துதல்மத்திமம் பழம் பணிகாரம் உண்பது அதமம். நித்திரை விழிக்க இயலாதவர்கள் பதினன்கு நாழிகைக்கு மேல்வரும் லிங்கோற்பவ காலம் நீங்கும வரையும் நித்திரையொழித்தல் வேண்டும், இத் தினத்தில சிவாலயத்தில் நெய் விளக்கேற்றுதல் மிகப்பெரும் புண்ணியமாம்.

சிவராத்திரி வழிபாட்டு விளம்பரங்கள் சிலவற்றைக் கண்ணுற்றோம. அவற்றுளுள்ள சில நிகழ்ச்சிகள் முற்சொல்லப்பட்ட விரதமுறைகளுக்கு முரண்பட்டுள்ளன. வில்லுப்பாட்டுகளும், நாடகங்களும நடனங்களும் சினடி சிலம்படிகளும் சிவராத்திரி வழிபாட்டுக்குச சற்றேனும் பொருத்தமில்லாதவை. விழா நிர்வாகிகள் ஒலி பெருக்கிகளையும், மின் விளக்குகளையும் நிறுவிச் சகிக்கமுடியாத ஒலியையும், ஒளியையும் உண்டாக்கி அடியார்கள மனவொருப்பாட்டுடன் சிவனை வழிபடுவதற்கு பங்கம் விளைக்கின்றார்கள். அடியார்கள் புலனடக்கத்துடன் இறைவனை வழிபடுதற்கு அவர்கள் துணைபுரிதல் வேண்டும். புலனடக்கம் மனத்தை புறவிருத்தி மார்க்கத்தில் செல்லாமல் நிவிர்த்தி மார்க்கத்தில் செய்யவுதவும். நிவிர்த்தி மார்க்கமே புலனொடுக்கத்தை உண்டு பண்ணும் புலனொடுக்கமின்றேல் சிவஞானம் சித்தியாகாது.

ஆலயத்துள் ஒருவர் நுழைந்தவுடன் சிவ சிந்தனையை வளர்க்கக்கூடிய காட்சிகளும் கிரியைகளும் அங்கு நிகழ்தலவேண்டும. பொருளை விரயஞ்செய்து இப் புண்ணிய தினத்தில் வீண் கேளிக்கைகளையும் படாடோபமான நிகழ்ச்சிகளையும் நிகழச் செய்தல குளிக்கப்போய் சேறு பூசுதலை நிகர்க்கும.

ஆலய குருக்கள்மாரும் பரிபாலர்களும் இவ்விதமான வெறுக்கத்தக்க நிகழ்ச்சிகளைத் தடைசெய்வார்களாக.

கையொன்று செய்ய விழியொன்று
நாடக் கருத்தொன்றெண்ண
பொய்யொன்று வஞ்சக நாவொன்று
பேசப் புலால்கமழும்
மெய்யொன்று சாரச் செவியொன்று
கேட்க விரும்புமியான்
செய்கின்ற பூசையெவ் வாறுகொள்
வாய்வினை தீர்ப்பவனே.

## யாழ், பரமேசுவரக் கல்லூரியில் வேதாத்தியயன, தேவார வகுப்புகள்

பரமேஸ்வரக் கல்லூரியில் மேல்மாடியில் உள்ள ஸ்ரீ இராமநாதன் பிரார்த்தனை மண்டபத்தில் பிரதி போயா தினங்களிலும், போயாவுக்கு முன் தினங்களிலும் காலை 8-30 மணி தொடக்கம் 11 மணி வரையும், வேதாத்தியயன வகுப்பு, தேவார திருவாசகப் பண் வகுப்பு, புராண படன வகுப்பு ஆகிய மூன்றும் சிறந்த ஆசிரியர்களால் இலவசமாகப் பயிற்றப்பெற்று வருகின்றன இவ் வகுப்புகளில் பாடசாலை மாணவர்களுடன், வெளிமாணவர்களும் அன்பர்களும் சேர்ந்துபயன் பெறலாம். மேற்படி வகுப்புகளிற் பயில விரும்பும் அன்பர்கள் தங்களது பெயர் விலாசங்களை பரமேசுவரக்கல்லூரிப் பெற்றார் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு மு. ஞானப்பிரகாசம் அவர்களுக்கு அறிவித்து அவர்களோடு தொடர்புகொண்டு மேலும் வேண்டிய விபரங்களை அறிந்துகொள்ளுவார்களாக. (ந. நி.)

## நம்குலந்து நாயகன் — ஆறுமுக நாவலன்

— கவிஞர் இ முருகையன் —

11-12-68 இல் விவேகானந்த சபை (யில் நடைபெற்ற) நாவலர் குருபூசை விழாக் கவிதை

முன் வளர்ச்சி — 2

உடுபுடைவை சம்பளங்கள் தருகின்றோம்
ஊர்முழுவதும் உங்கள் மேன்மை
தடபுடலாய் ஆட்சி செய வழிவகுத்துத்
தருகின்றோம்; சமயம் மாறி
விடும்' என்று சொன்னார்கள் மேல்நாட்டார்
இங்கு சிலர் 'மிக நன் றென்றார்
அடிமைகளாய் ஆவதற்கும் ஒருப்பட்டார்
பண்பாட்டை அடகு வைத்தார். (4)

பிழைப்பதற்கு வழிதேடிப் பிறநாட்டார்
கலாசாரப் பிடிக்குள் தம்மை
நுழைத்து விட்டார் மேற்சொன்ன சிலபேர்கள்
பண்பிழப்பு நோய்வாய்ப் பட்டார்
விழிக்கவைக்க ஒரு சிறுவன் நல்லூரில்
திட்டமிட்டான்; மெய்ஞ்ஞான னத்தைத்
தொழிற்படுத்த, உயிர்ப்படுத்திச் சுடர்ப்படுத்த
உருத்தெழுந்தான்; தொண்டு செய்தான் (5)

பண்டைய நம் நூல்கள் பல படித்தமையாற்
புலமை பெற்றான்; பற்று மிக்கு
வண்டமிழும். அது தவிர்ந்த வடமொழியும்
இங்கிலீசும வசப்ப டுத்திக்
கொண்டதனால் அவனுடைய கொள்கைவலு
இறுகியது; கூர்மை ஞானம்
உண்டு நம ரிடையேயும் என்பதனை
மெய்ப்பித்தான்; உசாராய் நின்றான். (6)

வண்ணையிலே சிவன் கோவில் முன்றலிலே
பேரவை முன் வந்து நின்றான்
எண்ணெயிட்டு விளக்கேற்றி விநாயகனைப்
பணிந்தொரு பா இசைத்தான் பின்னர்;
மண்ணதிர, வான் துளங்க மக்களினைபாற்
பிரசங்கம் வழங்க லானான்
'பண்ணுகிறாய சூழ்ச்சி, பாதிரியே!
கேள்' என்றான்; பயத்தை விட்டான். (7)

(வளரும்)

## சிவநோன்பினால் ஆணவத்தையொழிக்கலாம்

———0———

திரு செ. தருமராசா புலோலி கிழக்கு, பருத்தித்துறை

சிவராத்திரி என்பது சிவனுக்குரிய இரவு எனப் பொருள்படும். அதாவது சிவனை வழிபடவேண்டிய இரவுகளில் சிறந்த நன்மைதரும் இரவு என்பதாகும் சிவராத்திரி நோன்பு மாசித் திங்கள் அமாவாசைக்கு முன் தினத்தினிரவு நோற்கப்படுகிறது

பல பிறவிகளை எடுத்த உயிர்களுடைய களைப்பைப்போக்கும்பொருட்டு உலகத்தை இறைவன் ஒருபோது அழிக்கின்றார். அதன்பின் பலகாலம்உயிர்கள் தோன்றமல் இருப்பதைக் கண்ட உமாதேவியார் சிவனைப் பூஜிக்கவேண்டி நின்றார். அவர் அங்ஙனம் வேண்டி நின்ற புனித நாளே சிவராத்திரி நோன்புத் தினம்எனப் புராணம்புகழ்கின்றன. இன்னுமொரு கத்துவக்கதை அறியாமையால்ஏற்படும் இன்னல்களை ஆழமாக எடுத்தோதுகின்றது.

முன்னொரு காலத்தில் விட்டுணுவுக்கும், படைப்புக் கடவுளாம் பிரமாவுக்கும் ஒரு வாக்குவாதத்தால் தகராறு உண்டாகி மோதல்கள் ஏற்பட்டன. நாம் தம்தாமே முழுதற் கடவுள் என்ற ஆணவத்தால் செருக்கடைந்து தந்தையும் தனயனும் போர்புரிந்தனர் அதனல் உலக உயிர்களுக்கும், பொருட்களுக்கும் அதிக சேதம் உண்டாயிற்று. நிலைகலங்கிய முனிவர், தேவர், அசுரர் மக்கள் முதலானோர் இறைவனிடம் முறையிட்டுத் தம்மைப் பாதுகாக்குமாறு வேண்டி நின்றனர். அவர்கள் கேட்டுக்கொண்டபடி இறைவன் ஒருநாள் இரவு அவர்கள் மத்தியில் ஜோதிப் பிழம்பாய் மண்ணுலகத்திலிருந்து விண்ணுலகம வரை பரந்து நின்றார். அத்துடன் அச்சோதிப் பிழம்பிலிருந்து ஓர் அசரீரி வாக்கும பேரொலி செய்தது. "வீண் பெருமை வாதத்தால் செருக்கடைந்து திரியும் உங்கள் இருவரில் எவரேனும் இவ் வொளிப் பிழம்பின் அடியையேனும், முடியையேனும் கண்டுபிடித்தால் அவரே முழுதற் கடவுள்" என்று கூறிநின்றது. அதனால் அதிர்ச்சியடைந்த அவ்விருவரும் தத்தமக்குள் இணங்கி அடியையும், முடியையும் தேடுவாராயினர். விட்டுணு பன்றி வடிவில் நிலத்தை வேகமாகத் தோண்டிச்சென்றார். பிரமன்முடியைத் தேடும்பொருட்டு ஆகாயத்தில்அன்னப் பட்சி உருவத்தில் பறந்து சென்றார் விட்டுணு தன் சக்தியுள்ளவரை முயன்று அடியைக் காணுதவராய் மெலிந்து, வாடி வதங்கிப் பூமிக்குத் திரும்பினார். பிரமாவும் ஆகாயத்தில்உயரச் சென்றும முடியைக் காணுதவராய்த் துன்புற்றார். ஈற்றில் இருவரும் சிவனைவழிபட்டனர். ஆணவத்தையும், அகங்காரத்தையும அகற்றி நற்புத்தி புகட்டி நல் அறிவொளி அருளுமாறு இறைவனைத்தொழுது இறைஞ்சி நின்றதாகப் புராணம் கூறும். அங்ஙனம ஜோதி தோன்றியதும், அதன் அடி முடியைத் தேடிய இரவே சிவராத்திரி என்பர்.

## பாராட்டுகிறோம்

சைவ பரிபாலனசபை, உட்பட்ட பல சங்கங்களும் இந்துசாதனம் முதலிய பத்திரிகைகளும் வட பகுதியில் சாராயம் வடிக்கும் தொழிற்சாலை நிறுவவேண்டாமென விடுத்த வேண்டுகோளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளதற்காக அரசாங்கத்தை வடபகுதி மக்கள் பலவாறு பாராட்டுகின்றார்கள்.

## புதிய சமாதான நீதவான்

—0—

இணுவில், பேராயிரமுடையார் சந்ததியைச் சேர்ந்த இராமநாதர் கதிரித்தம்பியின் மகனும் சமூக சேவையாளருமாகிய செல்லத்துரை அவர்கள் சமாதான நீதவானுகநியமனஞ்செய்யப்பட்டுக் கௌரவிக்கப்பட் டிருக்கின்றனர். இவர் மல்லாகம், கல்கிசை, கொழும்பு, யாழ்ப்பாணம் முதலிய இடங்களிலுள்ள நீதிஸ்தலங்களில் பிரதமலிகிதராகவும சக்கிடுத்தாராகவும், முதலியாராகவும் சேவை புரிந்தனர். இப்பொழுது நீதிமன்ற ஏலவிற்பனையாளராகவும் கடமை புரிந்து வருகின்றனர். இவர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியினதும் பழைய மாணவருமாவர் அண்மையில் யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி திரு. ஐ. எம். இஸ்மேயில் முன்னிலையில் சத்தியப்பிரமாணஞ் செய்து கொண்டனர்.

## வேதாகமத் தோற்றம்

(3-ஆ பக்கத்தின் வளர்ச்சி)

ம்நூலகள் தேவாரம் திருவாசகமென் னுமிரண்டுமாம் சிவாகமத்தின் ஞானகாண்டப்பொருளைச்சுருக்கி இனிது விளக்குக தமிழ்ச் சித்தாந்த சாத்திரஙகள திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞானபோதம், சிவஞானசித்தியார், இருபா இருபது உண்மை விளக்கம, சிவப்பிரகாசம், திருவருட்பயன் வினவெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் என்னும் பதினான்குமாம்.

திருச்சிற்றம்பலம்

## வேதாகமத் தோற்றம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ங்களில் வீழ்ந்து துன்பத்தை அனுபவிப்பார்கள். இதற்குப் பிரமாணம்

சிவஞானசித்தியார்

"ஆணையாயவனிமன்னனருமறை
முறைசெய்யாரை
ஆணையிற்றண்டஞ்செய்து
மருஞ்சிறையிட்டும் வைப்பன்"
"அருளினுலுரைத்த நூலின்வழி
வாராதன் மஞ்செய்யின்
இருளுலாநிரயத்துன்பத்திட்டி
ரு பாவந்தீர்ப்பன்" எனவும்

உபதேசகாண்டம்

"ஈதெலாமிப் பரிசெடுத்துக்
காட்டின
வேதமப்பொருளெலாம்
விரித்தவாறினைப்
பேதறப்பொய்மையென்றிழி
யப்பேசினோர்
தீதெறுநரகெலாஞ் சென்று
வீழ்வரே" எனவும்
கூறியவாற்றாலுணர்க,

இன்னலை முரைத்தனவணர்த்து
மெய்பிரான்
தொன்னிலையெனவகுத்துணருந்
தொன்மைமேலோர்
பின்னியவிருவினைத் தொடரின்
பின்னனித்
துன்னருங்கதியடைந்தறுவ
துண்மையால்"
என்பதனலறிக

வேதத்தின் ஞானகாண்டப்பொருளைச் சிவாகமத்துக்குமாறுபடா வண்ணம் உள்ளபடியறிவிக்குந் தமி

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல: M, B 8817

நீர்வேலி வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி
எதிராக — வழக்காளி

1. முதலித்தம்பி நமசிவாயமும்
2. முதலித்தம்பியின் மைம்பெண் பொன்னு', இருவரின்விலாசம் மசுவாஸ், நீர்வேலி
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 8817-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் 1 துண்டுக் காணியை 1969-ஆம் வருடம் பங்குனி மீ 29-ம் - (29-3-69, சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபாய் 1376/- ம், 6-2-67 தொடக்கம் 15-5-68 வரைக்கும் ரூபாய் 922-40 க்கு 4% வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5வீத வட்டியும் கோட்டு செலவு 279/50-

காணியின் விபரம்

வடமராட்சி, யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்கு கோப்பாய் கோயிற் பற்று, நீர்வேலி "மன்னைக்கன் தோட்டம்" நில பர, 7-0 குளி இதற்கெல்லை கிழக்கு காசிநாதர் வேலுப்பிள்ளை யினுதனர், வடக்கு சங்கரப்பிள்ளை பெண் மூர்த்தனச்சன் ஆதனம், மேற்கு கணபதி சின்னப்புவுக்கும் மற்றவர்களுக்குமுரிய ஆதனம் தெற்கு சிவசுந்தரம் விசுவநாதருக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம், இதடங்களில் பிரிவிடப்படாத ½ பங்கு. இதைச் சேர்ந்தவைகளும் இந்தக் காணிக்குள் ஊடாகச் செல்லும் ரோட்டுக்கு காணி பிற நீங்கலாக. பதிவிலக்கம்: K 234/178.

14, டேவிற் வீதி
யாழ்ப்பாணம்
31-1-69.

அ. போ எதிர்மனசிங்கி
கொமிசனரும் விலைமதிப்பாளரும்.
எம் 363, 14-2-69

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல. M B 7905

குமரையா கைம்பெண் செல்லமுத்து ஊரெழு, சுண்ணாகம்
எதிராக வழக்காளி
கந்தையா சபாரத்தினம் 184 / K, கண்டிரோட், யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M B 7905 -ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால்விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1969-ம் வருடம் பங்குனி மீ (ஒன்பதாம்) 9 உ ஞாயிற்றுக்கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை :- முதல் வட்டி ரூபாய் 895/-ம 24-12-65 தொடக்கம் 28-8-67 வரைக்கும் ரூபாய் 600/- க்கு 12% வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 % வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 244/57-

ஆதன விபரம்

வட மராட்சி, யாழ்ப்பாண மாவட்டமும் பகுதியும், சுண்டிக்குளி கோயிற்பற்று பிட்டி வளவும் வாலும் நெற் பரப்பு 10 (பத்து) எல்லை கிழக்கும்தெற்கும் கந்தையா கனகரத்தினம் பெண் புவனேஸ்வரிக்குமுள்ள ஆதனம், வடக்கு முருகேசு பெண் அம்மாக்குட்டியின் ஆதனம், மேற்கு கணபதிப்பிள்ளை செல்லையாவின் ஆதனம். (பதிவு இல: D 290/74)

" வேல் பதி"
புத்தூர், 6-2-69.

சி. சங்கரப்பிள்ளை J. P.
கோமிசனரும் விலைமதிப்பாளரும்
எம் 365 14-2-69

## அடைவு நகை ஏல விற்பனவு விளம்பர

யாழ்ப்பாணம், 65, பிரதான வீதி திரு. அ. மகாதேவா அவர்களிடம் 1966-ம் வருடம் மே மீ 1-ம் (1-5-1966) திகதிக்கு முன் வைத்த அடைவுநகைகளில் மீட்கப்படாதவற்றை 1969-ம் வருடம் மார்ச் மீ 2-ம் (2-3-1969) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9-30 மணி தொடக்கம் மேற்படி கடையில்வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ, குட்டிப்பிள்ளை,
ஏல விற்பனவாளர்,

"இராசகிரி"
643, காங்கேசன்துறைவீதி,
யாழ்ப்பாணம்.

M, 362, 7, 15-2-69.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

கபிரியல் யோவான், மத்திய கிழக்கு ரோட், யாழ்ப்பாணம்

இல: M B/7789 எதிராக — வழக்காளி

1. சுந்தர்சரவணை
2. பெண் பாக்கியம்' ஆரியகுளம் பருத்தித்துறை ரோட் யாழ்ப்பாணம்
எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M. B. 7789ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப்படி கீழே விபரிக்கப்படும் ஆதனம் 1969 ம் ஆ சித்திரை மாதம் 1-ம் திகதி (1-4-69) செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் அவ்வாதனத்திற்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை. வட்டியும் முதலுமாக ரூபா 9,920/- இன்னும் ரூபா 8000/-க்கிற்கு 5-11-65 தொடக்கம் 27-8-66 வரைக்கும் பன்னிரண்டு வீத வட்டியும் கூட்டிக் கூடியதொகைக்கு 27-8-66 தொடக்கம் முழுப்பணம் இறுக்கும் வரைக்கும் ஐந்து வீதவட்டியும் செலவு 373-62 சதமும் (ஏற்பட்ட செலவு) 259-65, வெலியாத்துச் செலவு 64-25 இனிமேலேற்படுஞ் செலவு 50-22.

ஆதன விபரம்

வடமராட்சி. யாழ்ப்பாண மாவட்டமும், பகுதியும், வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று, வண்ணார்பண்ணை தென் கிழக்கிறை "ஆலடித்தறை கிடங்கு விழுந்த பள்ளம்" பர நில 1 குளி 13, 5/16, உலாந்த மெஸ்தர் ஜே உ. வீரசிங்கத்தால் 18-10-1935 ல், 1233 ம் இலக்கத்தில் வரைந்தாரிக்கப்பட்டதுமான படத்தில் 2ம் துண்டு கல் வீடும், குசினியும், பயிர்களும் வடக்கு வெள்ளையிலிருக்கும் கிணற்றில் அரைவாசியும் எல்லை கிழக்கு கையொழுங்கை, வடக்கு வைரவி செல்லர் பெண் அன்னம்மா விற்குரியவாதனம் மேற்கு ரோட். தெற்கு சின்னத்தம்பி பெண் நாகம்மாவினுதனம். இவ்வெல்லைகளுக்குட்பட்டவைகள் முழுவதும்

"அகிலகம்"
28/1, யாழ்வீதி. யாழ்ப்பாணம்.
10—2—69.

தா. க. பொன்னுத்துரை J. P.
கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்
M 373 21-2-69

## கோட்டு விறபனவு விளம்பரம்

வழ இல. M. B 8673

வல்லிபுரம் கனகலிங்கம் கைம்பெண் ஞானசவுந்தரி 17, பண்டாரக்குளம் மேற்கு ஒழுங்கை நல்லூர் யாழ்ப்பாணம் காலஞ்சென்ற K S M சுப்பையா அவர்களின் தத்துவ வழக்கில் (1563, T. D. C. Jaffna, தத்துவகாரி -வழக்காளி

எதிராக

1. வயிரமுத்து குமாரவேலுவும்
2. பெண் செல்லம்மா வுப மீசாலை தெற்கு மீசாலை

எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின M B 8673-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் 1 துண்டுக் காணியை, 1969 ம் வருடம் சித்திரை மீ 19 திகதி சனிக்கிழமை பிற்பகல் 2-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபாய் 5680-ம12-12-66 தொடக்கம் 11-6-67 வரைக்கும் ரூபாய் 3500-க்கு 12 % வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 380-90.

காணியின் விபரம்

வடமராட்சி யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி சாவகச்சேரி கோயிற் பற்று மீசாலை இறை ' ஞானிக்காடு" நில- பர 8¼ இதில மேற்குப் பக்கமாக பிரிக்கப்பட்ட நில. பர. 2¼ம் கல்வீடும், பயிர்வகைகளும் மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும் எல்லை கிழக்கு வயிரமுத்து குமாரவேலுவுக்கும் பெண் செல்லம்மாவுக்குமுரிய இதன் மிகுதி ஆதனம் வடக்கு சாண்டி வீதி மேற்கு ஆறுமுகம் கைம் பெண் வள்ளிப் பிள்ளைக்கும் மருபேருக்குமுரிய ஆதனம் தெற்கு கணபதிப்பிள்ளை கந்தையாவினுதனம் பதிவு இல. F340/234

அ. போ எதிர்மனசிங்கி
கொமிசனரும் விலைமதிப்பாளரும்
14 டேவிட் வீதி, யாழ்ப்பாணம்
8-2-69 எம். 369 19-2-


# THAMBY & Co.

ACCEPT

**I. Fixed Deposits**

at the following **Rates of Interest**

| | | |
|---|---|---|
| 1 Year | 8 % | per annum |
| 2 Years | 9 % | „ „ |
| 3 Years | 10 % | „ „ |

FOR CHARITABLE INSTITUTIONS
12 % per annum

INTEREST IS PAYABLE ANNUALLY

N. B. These Deposits could be Withdrawn At Any Time by Giving the Firm 30 DAYS WRITTEN NOTICE

**II. Call Deposits**

THESE DEPOSITS COULD BE WITHDRAWN by giving the FIRM

30 Days Notice — Interest @ 8 % per annum
or 7 „ „ — „ 7 % „ „
or 3 „ „ — „ 6 % „ „

**III. Savings Deposits**

at the following RATES OF INTEREST

8 % per annum on MONTHLY MINIMUM BALANCES

10 % { "FOR CHARITABLE INSTITUTIONS"

*Head Office*: THIRUNELVELY, **JAFFNA**
*Branch* „ : VANNARPONNAI, **JAFFNA**



யாழ்ப்பாணம்

# — ஐக்கிய இலாப நிதி —

கொம்பனி லிட்

(ஸ்தாபிதம் 1918)

10,000-00 பங்குகள் ரூபா 5 விகிதமான 50,000-00

மாதாந்த சேமம் கட்டும் முறை.

மாசமொன்றுக்கு ரூபா 10-00 விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் கட்டுப் பணமும் வட்டியுமாக ரூபா 1000-00 திருப்பிக் கொடுக்கப்படும். ரூபா 100-00 விகிதமாகக் கட்டினுல் ரூபா 10,000-00 கொடுக்கப்படும்.

சேமிப்பு பற்றுவரவு எச்சகிதி.

ரூபா 1500-00 க்கு குறையாமல் இருக்குமாயின் 1 வித வட்டியுடன் சேமிப்புப் பற்று வரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட சேமம்.

சேமப்பணம் முறையே, 12, 24, 36, என்னும் மாச காலங்கள வரையறுத்து ஏற்படும் வட்டி முறையே 7, 8, 9. வீதமாகக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடு வைத்துக் கொண்டும், சேமப்பணத்தைப் பிணையாக வைத்துக் கொண்டும் கடன் கொடுக்கப்படும் முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை எங்கள் காரியாலய மூலமாக அறிந்துகொள்ளலாம். — மனேஜர்


## நாவலர் சொற் கேளீர்

புண்ணியங்களாவன யாவை?

கடவுளை வழிபடுதல், தாய், தகப்பன், உபாத்தியாயர், குரு முதலாகிய பெரியோர்களை வணங்குதல், உயிர்களுக்கு இரங்குதல், உண்மை பேசுதல், செய்ந்நன்றியறிதல் முதலானவைகள்.

(சைவவினுவிடை முதற் புத்தகம்)

